**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 04.02.2025**

**O.S. 203/2021**

**வா.சா. 1 - சாந்தி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA. எனது படிப்பு செலவினை பார்ப்பது எனது தாயார் என்றால் சரிதான். என் பிறந்த தேதி என்ன என்றால் 18.05.1987. எனது திருமண தேதி என்ன என்றால் 08.11.2010. எனது திருமண செலவை எனது தாயார் தான் பார்த்தார் என்றால் சரிதான். என் தாயார் அவரது பெயரில் இருந்த சொத்துக்களை விற்பனை செய்து எனது திருமண செலவை செய்தார் என்றால் என் தாத்தா சொத்து என் அம்மா பெயரில் இருந்தது அதை விற்று திருமணம் மற்றும் அண்ணா, அக்காவிற்கு கொடுத்து செலவு செய்தார். என் தாயர் அவரது சொத்தை விற்று அண்ணா, அக்காவிற்கு கொடுத்தார் என்ற விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் வீட்டு செலவு என சொல்லியுள்ளேன். வழக்குரை நான் கூறிய விபரங்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட வழக்குரை அல்ல என்றால் எனக்கு அந்த கேள்வி புரியவில்லை. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண். என்ன என்றால் 2489. வழக்கு பட்டிகை சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். வீட்டு கதவு எண் என்ன என்றால் 18- 108/1 என நினைக்கிறேன் சரியாக நியாபகமில்லை. எத்தனை வருடமாக எனக்கு நியாபகம் இல்லை என்றால் திருமணம் முடிந்து 15 வருடம் ஆகிவிட்டது அதனால் நியாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து வீட்டின் மின் இணைப்பு எண் என்ன என்றால் 07-144-077-266. வீட்டிற்கு வரி விதிப்பு மின்சார கட்டணம் எவ்வளவு என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் வீட்டு வரி,

மின் இணைப்பு, கரத்தீர்வை அனைத்தும் 4ம் பிரதிவாதி மீனா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மீனா தபசில் வீடுகளை வாடகைக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 30.09.2016 முதல் மீனா தான் வாடகை வாங்கி வருகிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மீனா தபசில் வீடு அனுபவத்தை எனக்கு பெற்றுதர வேண்டும் என பரிகாரம் கேட்கவில்லை என்றால் இடத்தில் பாகம் தான் கேட்கிறேன் கோரிக்கை வைக்கவில்லை. என் தாத்தா சுவாமிகண்ணுக்கு என் தகப்பனாரோடு சேர்த்து 4 பிள்ளைகள் அதில் ஒருவர் பெண் தங்கலெட்சுமி என்றால் சரிதான். தங்கலெட்சுமிக்கு என் தாத்தா சொத்தில் எந்த பங்கும் கொடுக்கவில்லை என்றால் ஒரு இடத்தை கொடுத்து தான் திருமணம் செய்தார். தங்கலெட்சுமிக்கு என் தாத்தா சொத்தில் எந்த சர்வே எண் எந்த கிராமத்தில் உள்ள சொத்து கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி விபரம் தெரியாது பெரியவர்கள் கொடுத்ததாக சொல்வார்கள் அது மட்டும் தான் தெரியும். தங்கலெட்சுமிக்கு என் தாத்தா சொத்தில் எந்த பங்கும் கொடுக்கவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இடலாக்குடி சார்பதிவாள அலுவலக பாக பிரிவினை ஆவண எண். 243/2006 மூலம் என் தாயாருக்கு தெங்கம்புதூர் வில்லேஜ் 325/2, 351/8, 321/1 சொத்துக்கள் கிடைத்ததாகவும் அதனை என் தாயார் விற்பனை செய்ததாகவும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும் படித்து பார்த்துள்ளேன். 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் பாக பிரிவினை ஆவண எண். 243/2006 சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ல்

சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் ஆதியில் என் தாத்தா சுவாமிக்கண்ணுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ள சரத்துக்கள் அனைத்தும் சுவாமிகண் நாடாரின் குடும்ப உறுப்பினர்களின் ஏற்பாட்டின் பேரில் எழுதப்பட்ட காரணத்தினால் மேற்படி இரண்டு ஆவணங்களையும் ரத்து செய்ய வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ள சரத்துக்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களை எப்போது படித்து பார்த்தேன் என்றால் படித்து பார்த்ததில்லை என் அம்மா சொல்லி எனக்கு தெரியும். என் தாயர் மேற்படி பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களை பற்றி எத்தனை வருடத்திற்கு முன்பு எனக்கு சொன்னார்கள் என்றால் திருமணத்திற்கு முன்பு சொல்லியுள்ளார் வருடம் நியாபகம் இல்லை. திருமணத்திற்கு எத்தனை வருடத்திற்கு முன்பு பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களை பற்றி சொன்னார்கள் என்றால் நான் கல்லூரி முதலாம் ஆண்டு படிக்கும் போது சொன்னார்கள். நான் எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் இந்து கல்லூரியில் தமிழ் பி.ஏ படித்தேன். பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் என் தாயாரின் பெயரில் இருக்கட்டும் என சொல்லும் போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் என் அண்ணன் அக்கா இருந்தார்கள். வா.சா.ஆ 3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள முதலாவது சொத்து தான் வழக்கு பட்டிகை சொத்து என்றால் சரிதான். எனக்கோ என்னுடன் பிறந்தவருக்கோ தபசில் சொத்தில் உரிமை இருப்பதாக வா.சா.ஆ 3 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தின் படி தபசில் சொத்தில் முழு உரிமை எனது தாயாருக்குதான் உண்டு என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு தபசில் சொத்தில் முழு உரிமை எனது

தாயாருக்குதான் உண்டு என குறிப்பிட்டுள்ளது. என் தாயார் வா.சா.ஆ 3 ஆவணத்தின் படி தபசில் சொத்திற்கு பட்டா பெற்று வரி செலுத்தி வந்தார் என்றால் சரிதான். என் தாயார் என் சகோதரிக்கு வா.சா.ஆ 4 செற்றில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 செற்றில்மெண்ட் ஆவணத்தின் படி என் சகோதரி தபசில் சொத்திற்கு பட்டா பெற்று வரி செலுத்தி வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 செற்றில்மெண்ட் ஆவணம் முறைகேடாக எழுதப்பட்டது என காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4 செற்றில்மெண்ட் ஆவணம் எழுத என் தாயாருக்கு முழு உரிமை இருந்ததால் புகார் கொடுக்கவில்லை என்றால் என் தாயார் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு விபரம தெரிந்த பிறகு புகார் கொடுத்தேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரம் சாமிக்கண்ணுக்கு பாத்தியப்பட்ட தெங்கம்புதூர் கிராம புல எண். 325/2 ல் 4 சென்ட் 270 சதுர லிங்சு புல எண். 351/8 ல் 12 சென்ட் 350 சதுரலிங்சு நிலமும் புல எண். 327/1ல் 9 சென்ட் 410 சதுரலிங்சு நிலமும் என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரம் எழுதும் போது எனக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரத்தில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரம் எழுதும் போது எனக்கும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரம் பற்றி தெரியும் என்றால் சரிதான் என் தாயார் எங்களுக்கு திருமணம் முடிந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம் என சொல்லிவிட்டார். வா.சா.ஆ 3 மற்றும் பி.வா.சாஆ 1ன் படி எனக்கு எந்த சொத்துக்களும் ஒதுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 3 மற்றும் பி.வா.சாஆ 1 செல்லாது என எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 3 மற்றும் பி.வா.சாஆ 1 குடும்ப உறுப்பினர்களின் ஏற்பாட்டின் படி எழுதப்பட்டதால்

ரத்து செய்ய எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 பாகப்பத்திரம் மூலம் கிடைத்த 7 சென்ட்டை மைக்கேல் ஸ்டீபன் என்பவருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் என் தாயார் மைக்கேல் ஸ்டீபன் என்பவருக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் ஆவணத்தை நான் இதுவரை பார்த்ததில்லை எனக்கு தெரியாது. ஆனால் இந்த ஆவணம் தான் சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் என் தாயார் சிம்சன் என்பவருக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் என் தாயார் சுமதி என்பவருக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் என் தாயார் முகவர் மூலமாக வேணு குமார் என்பவருக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் தெங்கம்புதூர் கிராம புல எண். 351/8 க்கான வில்லங்கசான்றிதழ் கணிணி நகல் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் தாயார் பாகபிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்களை விற்ற விபரம் என் திருமணத்திற்கு எப்போது தெரியவந்தது என்றால் திருமணத்திற்கு கொஞ்சநாளுக்கு முன்பாக தெரியவந்தது. என் தாயார் விற்ற சொத்துக்கள் என்

திருமணத்திற்காக விற்றதாக எழுதப்பட்டுள்ளது என்றால் கொஞ்ச சொத்துக்கள் தான் திருமணத்திற்காக விற்றதாக தாயார் சொன்னார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**